தொந்திக் கணபதி வா வா வா
வந்தே ஒருவரம் தா தா தா
கந்தனின் அண்ணா வா வா வா
கனிவுடன் ஒருவரம் தா தா தா

ஆனை முகத்துடன் வா வா வா
அழகிய கையுடன் வா வா வா
பானை வயிற்றுடன் வா வா வா
பணிந்தேன் ஒருவரம் தா தா தா

எல்லாம் அறிந்த கணபதியே
எவ்வரம் கேட்பேன் தெரியாதா
நல்லவர் என்னும் ஒருபெயரை
நாம் பெற நீ வரம் தா தா தா.

ஜெயகணேச ஜெயகணேச ஜெயகணேச ஓடி வா
ஸ்ரீகணேச ஸ்ரீகணேச ஸ்ரீகணேச ஆடி வா
ஜெயகணேச மங்களங்கள் தங்கிடவே ஓடி வா
ஸ்ரீகணேச மாண்புடனே நாங்கள் வாழ ஆடி வா
ஜெயகணேச நெஞ்சக் கனகல் நெகிழ்ந்திடவே ஓடி வா
ஸ்ரீகணேச வஞ்சப் பகைகள் அழிந்திடவே ஆடி வா (ஜெயகணேச)

பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்

ஆற்றங் கரை ஓரத்திலே அரச மரத்து நிழலிலே
வீற்றிருக்கும் பிள்ளையார் வினைகள் தீர்க்கும் பிள்ளையார்(பிள்ளையார்)

ஆறுமுக வேலனுக்கு அண்ணனான பிள்ளையார்
நேருந் துன்பம் யாவையும் நீக்கி வைக்கும் பிள்ளையார் (பிள்ளையார்)

மஞ்சளாலே செய்யினும் மண்ணினாலே செய்யினும்
அஞ்செழுத்து மந்திரத்தை நெஞ்சில் நாட்டும் பிள்ளையார் (பிள்ளையார்)

அவல் பொரிக் கடலையும் அரிசிக் கொழுக்கட்டையும்
கவலை யின்றித் தின்னுவார் கண்ணை மூடித் தூங்குவார் (பிள்ளையார்)

கலியுகத்து விந்தைகளைக் காணவென்று அனுதினம்
எலியின் மீது ஏறியே இஷ்டம் போலச் சுற்றுவார் (பிள்ளையார்)